**கவனிக்க.-** *2006.09.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* II, *பகுதி* IV *(அ) மற்றும் பகுதி* IV *(ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1465 - 2006 සැප්තැම්බර් 29 වැනි සිකුරාදා - 2006.09.29**

*1465 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 896 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 899 |


**கவனிக்க.-** (i) *பிரேமதாச கேகொட மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *மாளிகாவத்தை ஜனாசா மற்றும் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, செத்தெம்பர் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, ஒற்றோபர் 05 ஆந் தேதி வியாழக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, செத்தெம்பர் 22 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1* விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

*1.2* சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

*1.3* சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1* நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

*2.2* அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

*2.3* அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1* நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

*3 : 1 : 1* சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

*3 : 1 : 2* சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

*3 : 1 : 3* சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

*3 : 1 : 4* அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

*3 : 1 : 5* அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

*3 : 1 : 6* இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

*3 : 1 : 7* அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

*3 : 1 : 8* தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

*4.1* நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

*4.2* நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

*4.3* அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

*4.4* ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1* ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1* எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

*6.2* விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

*6.3* விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

*6.4* விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

*6.5* விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1* தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச் சேவை ஆணைக்குழு

குவாசி பதவிகளுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளல்

*கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் 115 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் குவாசிகளைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் இதற்காக விண்ணப்பிக்கத் தகைமை பெற்றுள்ளவர்களாவர் :-*

*சட்டத்தரணியாக அல்லது பல்கலைக்கழகப் பட்டம் பெற்றுள்ள ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் தொடர்பான அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் பட்டம் பெற்ற மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற அரசாங்கப் பாடசாலை தலைமை ஆசிரியர் ஒருவராக அல்லது பொருத்தமான தொழில்சார் தகைமை உள்ள ஒருவராக இருத்தல் வேண்டும்.*

*விண்ணப்பதாரர் 40 வயதைத் தாண்டியவராகவும் நல்ல ஒழுக்கம் உடையவராகவும் இருக்க வேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்து பற்றிய விடயமான முஸ்லிம் சட்டத்தினைப் பற்றி நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல நடத்தையும் அந்தஸ்தும் உடைய விவாகமான ஆணாகவும் இருத்தல் வேண்டும்.*

*நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படும் நிச்சயமான ஒரு காலப்பகுதிக்குள் தெரிவு செய்யப்படுபவர் நியமிக்கப்படுவார்.*

*குவாசியானவர், அவர் நியமிக்கப்படும் பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பது சட்டரீதியாக அவசியமாகும்.*

*இவ் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மூலமாக தமது விண்ணப்பத்தினை 2006 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.*

*பி. டபிள்யு. டி. சீ. ஜயதிலக,*
*செயலாளர்,*
*நீதிச் சேவை ஆணைக்குழு.*

*நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகம்,*
*கொழும்பு 12,*
*2006, புரட்டாதி 14.*

### அட்டவணை

1. *அவிசாவலை:* அவிசாவலைப் பிரதேச நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதி.
2. *அநுராதபுரம்:* அநுராதபுரம் மாவட்டத்தில் நுவரகம், ஹூருளு மற்றும் தலாகம் பற்று இறைவரிப்பிரிவு.
3. *அக்கரைப்பற்று :* அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று இறைவரிப் பிரிவு.
4. *கொழும்பு தெற்கு :* கொழும்பு பிரதேச நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட கொம்பனி வீதி, கறுவாத் தோட்டம் ஆகிய பகுதிகள்.
5. *ஏறாவூர்ப்பற்று :* மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப் பற்று இறைவரிப்பிரிவு.
6. *காலி :* காலிப் பிரதேச நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதி.
7. *கம்பஹா :* கம்பஹா பிரதேச நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதி.
8. *அம்பாந்தோட்டை :* அம்பாந்தோட்டை பிரதேச நீதி நியாயாதிக் கத்திற்குட்பட்ட பகுதி.
9. *இறக்காமம் :* அக்கரைப்பற்று நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட வரிப்பத்தாஞ்சேனை, ஒட்டிப்புரம், அமிறலி புரம் யுனிற் - 10 ஏ, யுனிற் - 11 ஏ, நல்லவந்திமலையும், இறக்காமம் கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 1 தொடக்கம் 9 வரையான பகுதி.
10. *களுத்துறை :* களுத்துறை பிரதேச நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதி.
11. *கரைவாகுப்பற்று (வடக்கு) (கல்முனை) :* அம்பாறை மாவட்ட கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு.
12. *குருநாகல் :* குருநாகல் பிரதேச நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதி.
13. *கேகாலை :* கேகாலை பிரதேச நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதி.
14. *மொணறாகலை :* மொனராகலை மாவட்ட நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதி.
15. *நாவலப்பிட்டி :* கண்டி மாவட்டத்தில் உடபுலத்கமுவ இறைவரிப் பிரிவும், நுவரெலியா மாவட்ட ஹபுக்கஸ்தலாவ கிராமமும் அடங்கிய பகுதி.
16. *ஓட்டமாவடி :* மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்று மேற்கு பகுதி.
17. *பஹத்த ஹேவாஹெற்ற :* கண்டி மாவட்ட பஹத்த ஹேவாஹெற்ற பிறப்பு, விவாக, இறப்புப் பதிவுக்கான பிரிவு.
18. *பொலன்னறுவை :* பொலநறுவைப் பிரதேச நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதி.
19. *புல்மோட்டை :* திருகோணமலை மாவட்டத்தில் கிழக்கு, மேற்கு கட்டுக்குளம்பற்று இறைவரிப் பிரிவு.
20. *புத்தளம்-சிலாபம் :* புத்தளம் மாவட்டத்தில் (கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவு தவிர்ந்த) புத்தளம் - சிலாபம் நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதி.

21. *பூஜாபிட்டிய-ஹரிஸ்பற்று :* கண்டி மாவட்டத்தில் பூஜாபிட்டிய-ஹரிஸ்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவு.

22. *இரத்தினபுரி :* இரத்தினபுரி பிரதேச நீதி நியாயாதிக்கத் திற்குட்பட்ட பகுதி.

23. *சம்மாந்துறை :* அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேசமுட்பட இலக்கம் 1, 2 உம் மல்கம்பிட்டி, நயினாகாடு, மல்வத்தை, நாவிதன்வெளி மற்றும் அன்னவிலை பிரதேசங்கள் அடங்கிய பகுதி.

24. *தங்காலை :* தங்காலை பிரதேச நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதி.

25. *தம்பலகாமம் - கந்தளாய் :* திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் - கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவு.

26. *தும்பனை :* கண்டி மாவட்டத்தில் தும்பனை பிரதேச செயலாளர் பிரிவு.

9-922

---

## தாவரவியல் பூங்காக்கள், விலங்கினக் காட்சிசாலைகள் மேம்படுத்துகை அமைச்சு

### வரவேற்பு உத்தியோகத்தர் பதவி

தாவரவியல் பூங்காக்கள், விலங்கினக் காட்சிச்சாலைகள் மேம்படுத் துகை அமைச்சினது வரவேற்பு உத்தியோகத்தர் பதவியில் நிரந்தர ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2006.10.18 ஆகும். இதுபற்றிய விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் என்பவற்றினை தாவரவியல் பூங்காக்கள், விலங்கினக் காட்சிச் சாலைகள் மேம்படுத்துகை அமைச்சினது நிர்வாகப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. **பதவியின் பெயர்.-** வரவேற்பு உத்தியோகத்தர்

2. **வயதெல்லை.-** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (இங்கு குறிப்பிடக் கூடிய வயதெல்லை ஏற்கனவே அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகாது.)

3. **தொழில் விபரம்.-** தாவரவியல் பூங்காக்கள், விலங்கினக் காட்சிச்சாலைகள் மேம்படுத்துகை அமைச்சினது சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகை தருவோர்களை சிறந்த முறையில் வரவேற்றல், அவர்களை விழித்தல், அவர்களினது அத் தேவை களுக்கிணங்க சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் அல்லது பிரிவுகளுக்கு அனுப்பிவைத்தல்.

அமைச்சு தொடர்பான விசாரணைகளுக்கு விளக்கமாக பதிலளித்தல் மற்றும் அதனூடாக ஒழுங்காகவும் செயல்திறன் மிக்கதாகவும் சேவையை நிறைவேற்றல், வரவேற்புக் கூடத்திலுள்ள தொலைபேசி இணைப்பினை சிறப்பான முறையில் மேற்கொள்ளுதல், பராமரித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட தொலைபேசி விபரக்கோவையை பேணுதல்.

4. **கல்வித் தகைமை.-** க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கியம், எண் கணிதம்/வர்த்தக எண் கணிதம்/தூய கணிதம்/ஆரம்ப கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் 5 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)

அல்லது

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், ஆங்கிலம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் 5 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)

அல்லது

முதன்மை மொழி, கணிதம், ஆங்கிலம் உட்பட 4 பாடங்களில் "ஏ" அல்லது "பி" தர சித்திகளுடன் தேசிய கல்வி பொதுத் தராதர சான்றிதழ் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் 5 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)

அத்துடன்

ஆங்கில மொழியில் சரளமாக உரையாடும் ஆற்றல் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் மொழியானது தமிழ் மொழியல் லாதவிடத்து, அம்மொழிப் பாவனை தொடர்பான அறிவு, விசேட தகைமையாகக் கருதப்படும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்குதல் மூலம் திறமைகள் பரீட்சிக்கப்படும்.

5. **தொழில் மற்றும் வேறு தகைமைகள்.-** அரச அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் குறிப்பிட்ட துறையில் 2 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.)

6. **தரமும் சம்பள அளவுத்திட்டமும்.-** III ஆம் தரத்திற்குரிய சம்பள அளவுத்திட்டம் MN - 1-2006 (12,920 - 14 x 120 - 4 x140 - ரூபா 15,160)

7. **வினைத்திறன்காண் பரீட்சை.-** பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட தினத்திலிருந்து 3 வருடங்கள் கழியமுன்னர் முதலாவது வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் :-

(அ) தாபன ஒழுக்கக் கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் என்ப வற்றுடன் விடய அறிவு தொடர்பான பரீட்சையொன்று நடாத்தப்படும்.

(ஆ) இரண்டாம் மொழி தொடர்பான அறிவு.

க.பொ. த. (சா. த.) பரீட்சையில் முதன்மை மொழியாக சிங்கள மொழியைக் கொண்ட உத்தியோகத்தர் தமிழ் மொழியினையும், அதே பரீட்சையில் முதன்மை மொழியாக தமிழ் மொழியினைக் கொண்ட உத்தியோகத்தர் சிங்கள மொழியினையும் முதன்மை மொழியாக ஆங்கில மொழியினைக் கொண்டவர்கள் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் இரண்டாம் மொழி அறிவினையும் பெறுதல் வேண்டும். இரண்டாம் மொழி பற்றிய அறிவுக்குப் பதிலாக க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறிப்பிட்ட மொழியில் சித்தியடைந்திருத்தல் போது மானது.

**குறிப்பு.-** வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைதல் கட்டாயமாகும் என்பதுடன், 45 வயது பூரணமடைதல் என்பதால் வினைத்திறன்காண் பரீட்சையிலிருந்து விடுபடுவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது.

8. (அ) இப்பதவி நிரந்தரமானது, பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின் கீழான பங்களிப்பு ஓய்வூதியத்திற்குரியதாகும்.

(ஆ) தாபன ஒழுக்கக் கோவையின் II ஆவது அத்தியாயத்தின் 10-12 வரையிலான பிரிவுகளின் விதிகளுக்கு உட்பட்டதாகும்.

எஸ். லியனகம,
செயலாளர்.

தாவரவியல் பூங்காக்கள், விலங்கினக் சாட்சிச்சாலைகள் மேம்படுத்துகை அமைச்சு,
“சம்பத்பாய”,
இல. 82, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

9-923

---

## சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

### உயிரியல் வைத்திய பொறியியலாளர் பதவி

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் உயிரியல் வைத்திய பொறியியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இங்குள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பங்கள் இருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்கள் 2006.10.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக “செயலாளர், சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, “சுவசிரிபாய”, இலக்கம் 385, பத்தேகம விமலவங்ச மாவத்தை, கொழும்பு 10” என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “சுகாதார அமைச்சின் உயிரியல் வைத்திய பொறியியலாளர் பதவி” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

2. **சம்பளத் திட்டம்.**- ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555.
(SLI-2006) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் பிரகாரம்)

3. **வயதெல்லை.**- 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையனவாகமாட்டாது)

4. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

(1) *மின்னியல் பொறியியலாளர் பதவி :*

(அ) III பிரிவுகள் அடங்கிய பரீட்சையில் மின்னியல் சம்பந்தமான விடயத்துடன் லண்டன் ஆரம்ப பொறியியல் நிறுவனத்தின் I ஆம், II ஆம், III ஆம் பிரிவுகள் சித்தியடைந்திருத்தல்.
அல்லது

(ஆ) மின்னியல் விடயத்துடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொறியியல் துறைப் பட்டம் பெற்றிருத்தல்.
அல்லது

(இ) மின்னியல் மற்றும் அல்லது வானொலி பொறியியல் நிறுவனத்தில் பட்டதாரித்துவம் பெற்றிருத்தல்.
அல்லது

(ஈ) மின்னியல் மற்றும் வானொலி பொறியியல் நிறுவனம் தொடர்பான பிரதிநிதித்துவம் அல்லது மின்னியல் மற்றும் வானொலி நிறுவனத்தின் பிரதிநிதித்துவம் (எம். ஐ. ஈ. ஆர். ஈ.) அல்லது ஐ பிரதிநிதித்துவம் (எவ். ஐ. ஈ. ஆர். ஈ.) பெற்றிருத்தல்.

(2) *மின்சார பொறியியல் பதவி :*

(அ) III பிரிவுகள் அடங்கிய பரீட்சையில் உயர் மின்சார பொறியியல் மற்றும் மின்னியல் பொறியியல் விஞ்ஞானம் சம்பந்தமான விடயத்துடன் லண்டன் மின்சார பொறியியல் நிறுவனத்தின் I ஆம், II ஆம், III ஆம் பிரிவுகளில் சித்தியடைந்திருத்தல்.
அல்லது

(ஆ) III ஆம் பிரிவு சம்பந்தமான பரீட்சையில் சாதாரண மின்னோட்டம் விடயத்துடன் இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தில் மின்சார பொறியியல் சம்பந்தமான பரீட்சையில் I ஆம், II ஆம், III ஆம் பிரிவுகளில் சித்தியடைந்திருத்தல்.
அல்லது

(இ) சாதாரண மின்னோட்டம் சம்பந்தமான விடயத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பி. எஸ். சி. (பொறியியல்) பட்டம் பெற்றிருத்தல்.
அல்லது

(ஈ) லண்டன் மின்சார பொறியியல் நிறுவனத்தின் அங்கத்துவம்/உயர் அங்கத்துவம் (எச். ஐ. ஈ. ஆர்.) (எப். ஐ. ஆர். ஈ.) அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தின் அங்கத்துவம்/உயர் அங்கத்துவம் (எம். ஐ. ஈ./எவ். ஐ. ஆர்.) பெற்றிருத்தல்.

(3) *இயந்திர பொறியியலாளர் பதவி :*

(அ) லண்டன் பொறியியல் நிறுவனத்தில் I ஆம் II ஆம் பிரிவுகளில் சித்தியடைந்திருத்தல்.
அல்லது

(ஆ) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தில் இயந்திர பொறியியல் சம்பந்தமான பரீட்சையில் முதலாம், இரண்டாம் பிரிவுகளில் சித்தியடைந்திருத்தல்.
அல்லது

(இ) லண்டன் இயந்திர பொறியியலாளர் நிறுவனத்தில் பட்டதாரி அங்கத்துவம் பெற்றிருத்தல்.
அல்லது

(ஈ) இயந்திர பொறியியல் விடயத்தில் பி. எஸ். சி. (பொறியியல்) பட்டம் பெற்றிருத்தல்
அல்லது

(உ) லண்டன் இயந்திரப் பொறியியல் நிறுவனத்தில் அங்கத்துவம்/உயர் அங்கத்துவம் (எம். ஐ. எம். ஈ.)/ (எவ். ஐ. எம். ஈ.) அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தில் அங்கத்துவம்/உயர் அங்கத்துவம் (எம். ஐ. ஈ./எம். ஐ./எவ். ஈ.) பெற்றிருத்தல்.

5. **ஆட்சேர்க்கும் முறை.**- விளம்பரம் செய்து, இவ்விடயம் தொடர்பாக அமைக்கப்படும் ஒழுங்கான தெரிவுக்குழு ஒன்றின் மூலம் நேர்முகப் பரீட்சை நடாத்துவதன் மூலம்.

6. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.**- (1) இந்நியமனம் நிரந்தரமானது. பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின்கீழ் ஓய்வூதியத்திற்கு உரித்து உண்டு.

**குறிப்பு**.- 2003.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதியம் உரித்துடைய பதவியொன்றை வகிப்பவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவருக்கு தொடர்ந்தும் ஓய்வூதியப் பிரமாணங்களுக்கு அமைய ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை உண்டு என்பதுடன் விதவைகள்/தபுதாரர்கள்/அனாதைகள் ஓய்வூதியத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்**.- தாபன விதிக்கோவை II ஆம் அத்தியாயத்தின் 10 இலிருந்து 12 வரையான பகுதிகள் ஏற்புடையதாகும். தற்போது அரச சேவையில் இருக்கும் அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பத்தை திணைக்களத்தின் தலைவரூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இவ்வறிவித்தலின் தேவைகளுக்கு எல்லாவிதத்திலும் அடங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பிரகாரம்,

ரஞ்சித் மலிகஸ்பே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும்
போஷணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும்
போஷணை அமைச்சு,
"சுவசிரிபாய",
385, பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2006.09.15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு**

*உயிரியல் வைத்திய பொறியியலாளர் பதவி*

1. (அ) முதலெழுத்துக்களுடனான கடைசிப் பெயர் :-----.
(ஆ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :-----.

2. முகவரி :-
(அ) பிரத்தியேக :-----.
(ஆ) அலுவலக :-----.

(அரசாங்க சேவையில்/மாகாண சேவையில்/கூட்டுத்தாபனத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர் அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் அதை உடனடியாக அறிவித்தல் வேண்டும்)

3. (அ) பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

(ஆ) விண்ணப்பிக்கும் கடைசித் திகதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

4. பால் :-----.

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-----.

6. கல்வித் தகைமைகள் :-----.

7. தொழிற் தகைமைகள் :-----.

8. சேவை விபரம் :-----.

| பதவி | நிறுவனம் | நியமனத் திகதி | நிரந்தரம்/ தற்காலிகம் |
|---|---|---|---|
| | | | |

இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் நியமனத்திற்குப் பின்பு கண்டுபிடிக்கப்படின் நஷ்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

9. **திணைக்களத் தலைவரது விதப்புரை :**

..........................................................
திணைக்களத் தலைவரது கையொப்பமும்
பதவியும்.

திகதி :-----.

9-891

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**உள்நாட்டலுவல்கள் அமைச்சு**

கிராம அலுவலர் தரம் II க்கு சேர்த்துக் கொள்வதற்கான
போட்டிப் பரீட்சை - 2006

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006.09.01 ஆம் திகதிய 1461 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I இன் தொகுதி II (அ) வின் கீழ் வெளியான மேற்படி போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்படுகின்றன :

1. அவ் வர்த்தமானி அறிவித்தலின் தமிழ் மொழிபெயர்ப்பில் குறிப்பிட்டுள்ள அட்டவணை I, அட்டவணை II ஆக திருத்தப்பட வேண்டியதுடன் வெற்றிடங்கள் நிலவும் பிரதேச செயலாகப் பிரிவுகளும், அவற்றிற்குரிய இலக்கங்களும் அட்டவணை I என புதிதாக இத்துடன் உள்ளடக்கப்படுகின்றது.

அட்டவணை I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | கடுவெல | 6 | லக்கல பெல்லேகம | 377 |
| | | | | கஹடகஸ்திகிலியா | 397 | லாகுகல | 517 |
| அட்டாளைச்சேனை | 522 | தெல்தோட்டை | 349 | கஹவத்தை | 266 | லங்காபுர | 424 |
| அகலவத்தை | 67 | தரணியகல | 250 | கலவான | 282 | லுணுகம்வெகெர | 159 |
| அக்மீமன | 91 | தெவிநுவர | 122 | கல்முனை | 526 | மாதம்பே | 492 |
| அக்குரண | 375 | திக்வெல்ல | 126 | கல்முனை தமிழ் பிரிவு | 527 | மடு | 605 |
| அக்குரஸ்ஸ | 129 | திம்புலாகல | 426 | கல்பிட்டிய | 484 | மடுல்ல | 183 |
| அலவ்வ | 470 | திவுலபிட்டிய | 34 | களுத்துறை | 81 | மதுராவல | 71 |
| ஆலையடிவேம்பு | 521 | தொடன்கொடை | 63 | கம்புறுப்பிட்டியா | 127 | மஹகும்புகடவல | 489 |
| அம்பகமுவ | 363 | தொலுவ | 348 | கந்தகட்டிய | 214 | மகாஓயா | 518 |
| அம்பலாங்கொடை | 92 | தொம்பெ | 33 | கந்தவளாய் | 692 | மகர | 39 |
| அம்பலாந்தோட்டை | 152 | எகட்டுவெவ | 470 | கண்டி பட்டினமும்சூழலும் | 331 | மகரகம | 8 |
| அம்பன் கங்கை | | | | கந்தளாய் | 663 | மகவெவ | 496 |
| கோரளை | 305 | எலகரா | 421 | கரச்சி | 691 | மகவிலச்சிய | 401 |
| அம்பன்பொல | 478 | எலப்பத | 286 | காரைதீவு | 524 | மாகோ | 458 |
| அம்பாறை | 511 | எல்லா | 222 | கரந்தெனிய | 101 | மாலிம்பட | 124 |
| ஆனமடுவை | 487 | எல்பிட்டிய | 97 | கருன்கொட்டிதீவு | 520 | மல்லவப்பிட்டிய | 475 |
| அங்குனகொலபலஸ்ஸை | 157 | எம்பிலிப்பிட்டிய | 260 | ஹொரண | 69 | மண்முனை வடக்கு | 545 |
| ஆரச்சிகட்டுவை | 490 | ஏறாவூர் நகரம் | 543 | கட்டான | 37 | மண்முனைபற்று | 560 |
| அரநாயக | 241 | ஏறாவூர் பற்று | 542 | கதிர்காமம் | 190 | மண்முனை தெற்கு | 544 |
| அத்துரலிய | 136 | கலென்பிந்துனுவெவ | 396 | கட்டுப்பத்தை | 462 | மண்முனை தென்மேற்கு | 552 |
| அத்தனகல்ல | 31 | கலேவெல | 310 | கட்டுவன | 168 | மண்முனை மேற்கு | 548 |
| அயகம | 263 | கல்கமுவ | 452 | கெப்பிடிகொல்லாவ | 382 | மன்னார் | 601 |
| படன்கும்புர | 166 | கலிகமுவ | 245 | கேகாலை | 244 | மாதனை கிழக்கு | 573 |
| பத்தேகம | 93 | காலி கடவத் சத்தர | 96 | கெகிராவ | 410 | மாதனை மேற்கு | 602 |
| பதுளை | 216 | கல்நாவ | 405 | களணி | 38 | மரிடைம் பற்று | 575 |
| பதுரளிய | 72 | கம்பஹா | 35 | கெஸ்பாவ | 4 | மாஸ்பொத்த | 473 |
| பலாங்கொடை | 275 | கம்கா இகல கோறளை | 345 | கிண்ணியா | 666 | மாத்தளை | 301 |
| பலப்பிட்டிய | 84 | கிரிபவ | 451 | கிரிஎல | 284 | மாத்தறை | 121 |
| பண்டாரகம | 66 | கொடகவெல | 278 | கிரின்டா-புகுல்வெல | 136 | மதுகம | 86 |
| பண்டாரவளை | 221 | கோமரன் கடுவல | 666 | கொபேகனே | 456 | மாவனெல்ல | 242 |
| பெலியத்தை | 154 | கபரதுவ | 99 | கொலன்னே | 279 | மாவத்தகம | 476 |
| பென்தோட்டை | 95 | ஹக்மன | 125 | கொலன்னாவை | 7 | மெதும்பர | 340 |
| பேரூவில் | 62 | கல்தும்முல்ல | 224 | கோரளைப்பற்று | 547 | மதகம | 182 |
| பிபில | 181 | ஹாலிஎல | 218 | கோரளைப்பற்று வடக்கு | 549 | மதிரிகிரிய | 423 |
| பிங்கிரிய | 454 | ஹம்பாந்தோட்டை | 151 | கோரளைப்பற்று மேற்கு | 545 | மீககிவுல | 213 |
| பியகம | 32 | ஹங்குரன்கெத | 385 | கோரளைப்பற்று மத்தி | 554 | மீரிகம | 42 |
| போபே-போத்தலை | 96 | ஹங்வல்ல | 5 | கோரளைப்பற்று தெற்கு | 563 | மிகிந்தலை | 408 |
| புளத்கொக்குப்பிட்டிய | 251 | ஹப்புத்தளை | 223 | மில்லனிய | 74 | பாததும்பர | 336 |
| புளத்சிங்கள | 70 | ஹாரிஸ்பத்துவ | 333 | மினிபே | 342 | பாதகேவாகெட | 339 |
| புத்தளை | 187 | கரலியத்த | 360 | மினுவங்கொட | 40 | பல்மடுல்ல | 274 |
| சிலாபம் | 491 | ஹிக்கடுவை | 100 | மொறட்டுவ | 3 | பிபத்தர | 133 |
| கொழும்பு | 1 | ஹிங்குரகொட | 422 | முலடியன | 128 | பொல்ககவெல | 471 |
| தமன | 513 | ஹோமாகம | 10 | முன்தலம | 485 | பொல்பிதிகம | 457 |
| தம்புள்ளை | 311 | ஹொரவப்பொத்தானை | 395 | முசலி | 604 | பொரதிவ்பற்று | 552 |
| தன்கொட்டுவ | 494 | இப்பாகமுவை | 460 | முத்தூர் | 664 | பொத்துவில் | 518 |
| | | | | நாகொட | 102 | புதுக்குடியிருப்பு | 571 |
| தெகியோவிட்ட | 249 | இமதுவ | 107 | நல்லூர் | 635 | பூஜாபிட்டியா | 334 |
| நெடுந்தீவு | 631 | இம்புல்பெ | 276 | நானாட்டான் | 603 | பூநகரி | 693 |
| இங்கிரிய | 73 | கொட்டப்பொல | 131 | நாரம்மல | 469 | புத்தளம் | 481 |
| இப்லோகம | 406 | கொட்டவெஹெர | 457 | நாத்தாண்டிய | 495 | ராஜாங்கனய | 404 |
| இரக்காமம் | 528 | கொத்மலை | 362 | நாஉல | 306 | ராம்பாவ | 394 |
| தீவு வடக்கு (ஊர்காவற் | | | | | | | |
| றுறை) | 633 | குளியாப்பிட்டிய கிழக்கு | 466 | நாவிதன்வெளி | 530 | ரம்புக்கன | 243 |
| | | | | நவக்தேகம | 406 | ரஸ்னாயகபுர | 455 |
| தீவு தெற்கு (வேலணை) | 632 | குளியாப்பிட்டிய மேற்கு | 467 | நீர்கொழும்பு | 41 | இரத்தினபுரி | 271 |
| ஜா-எல | 36 | குண்டசாலை | 337 | நெலுவ | 103 | இரத்தோட்டை | 303 |
| யாழ்ப்பாணம் | 634 | குருநாகல் | 474 | நிக்கவெரட்டிய | 453 | ரிதிகம | 477 |
| | | குருவிட்ட | 272 | நிந்தவூர் | 523 | ரிதிமாலியத்த | 212 |

| | | | |
|---|---|---|---|
| நிவித்திகல | 281 | ருவன்வெல | 247 |
| நியாகம | 104 | சாய்ந்தமருது | 529 |
| நொச்சியாகம | 400 | சம்மாந்துறை | 525 |
| ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை | 9 | சேருவில | 665 |
| நுவரெலியா | 361 | செவனகல | 191 |
| நுவரகம்பலாத்த மத்தி | 399 | சியம்பலாந்துவ | 185 |
| நுவரகம்பலாத்த கிழக்கு | 398 | சொரணதோட்ட | 215 |
| ஒகவெல | 160 | சூரியவெவ | 161 |
| ஒப்பநாயக | 287 | தலாவ | 402 |
| பச்சிலைப்பள்ளி | 694 | தங்கல்ல | 153 |
| பதவிஸ்ரீபுர | 670 | தமன்கடுவ | 425 |
| பதவிய | 391 | தம்பலகமுவ | 662 |
| பதியதலாவ | 315 | தம்பத்தேகம | 403 |
| பாதுக்கை | 12 | தனமல்வில | 189 |
| பலாகல | 411 | தவலம | 105 |
| பள்ளம | 408 | தென்மராட்சி | 641 |
| பல்லேபொல | 309 | திககொட | 123 |
| பலுகஸ்வெவ | 409 | திம்பிரிகஸ்யாய | 11 |
| பாணந்துறை | 64 | திரப்பனே | 407 |
| பண்டுகஸ்நுவர | 483 | திருக்கோவில் | 519 |
| பன்னல | 486 | தும்பனே | 332 |
| பன்வில | 338 | துணுக்காய் | 574 |
| பஸ்பாகே கோறளே | 346 | திஸ்ஸமஹாராமய | 158 |
| பஸ்கொட | 132 | திருகோணமலை நகரம் | 661 |
| பஸ்சர | 217 | உடுதும்பர | 341 |
| உடபலாத்த | 347 | வலஸ்முல்ல | 102 |
| உடுபத்தாவ | 465 | வனாதவில்லுவ | 482 |
| உடுநுவர | 343 | வறக்காப்பொல | 246 |
| உகன | 512 | வாரியப்பொல | 461 |
| உக்குவெல | 304 | வத்தளை | 43 |
| ஊவா பரணகம | 220 | வீரகட்டிய | 165 |
| மருதங்கேணி | 644 | வீரம்புகெதர | 472 |
| வடமராட்சி வடக்கு | 643 | வெலிகாம | 130 |
| வடமராட்சி தென்மேற்கு | 642 | வெலிகம்பொல | 277 |
| வலிகாமம் வடக்கு | 639 | வெலிகந்த | 427 |
| வலிகாமம் தென்மேற்கு | 636 | வெலிமட | 219 |
| வலிகாமம் மேற்கு (சங்கானை | 637 | வெலிபிட்டிய | 134 |
| வவுனியா | 721 | வெலிவிட்டிய திவிதுர | 108 |
| வவுனியா வடக்கு | 723 | வெல்லவாய | 188 |
| வவுனியா தெற்கு | 722 | வென்னப்புவை | 493 |
| வென்கல செட்டிகுளம் | 724 | யக்கலமுல்ல | 106 |
| வெருகல் | 671 | யட்டவத்தை | 302 |
| வலல்வாவிட்ட | 68 | யட்டிநுவர | 344 |
| லுனுகல | 226 | யட்டியந்தோட்ட | 248 |
| ஒட்டுசுட்டான் | 576 | வெலிஓய | 413 |

2. அவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, ஆங்கில மொழி பெயர்ப்பின் அட்டவணை I இல் குறிப்பிட்டுள்ள-

| | | |
|---|---|---|
| அஹலியபொட | 273 | |
| வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) | 640 | |
| வலிகாமம் தெற்கு (உடுவில்) | 638 | |
| கச்சதீவு | 412 | மற்றும் |
| முல்லைத்தீவு | 572 | ஆகிய பிரதேச செயலாகப் பிரிவுப் பெயர்களையும், இலக்கங்களையும் நீக்கிவிட்டு |
| லுனுகல | 226 | |
| வெலிஓயா | 413 | |
| ஒட்டுசுட்டான் | 576 | ஆகிய பிரதேச செயலகப் பிரிவுப் பெயர்களும், இலக்கங்களும் உள்ளடக்கப்படுவதுடன் |
| திகாமடுல்ல | 426 | ஆக குறிப்பிட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவின் பெயர் |
| திம்புலாகல | 426 | ஆகவும் |
| வடமாராட்சி கிழக்கு | 644 | ஆக குறிப்பிட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவின் பெயர் |
| மருதங்கேணி | 644 | ஆகவும் |
| நுகேகொட | 9 | ஆக குறிப்பிட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவின் பெயர் |
| ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை | 9 | ஆகவும் |
| மஹரகம | 9 | ஆக குறிப்பிட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுக்குரிய இலக்கம் |
| மஹரகம | 8 | ஆகவும் திருத்தப்படுகிறது |

"பஸ்நாயக்கபுர 456" எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுக்குரிய இலக்கம் "455" எனவும், கண்டி கடவத்சதர "332" எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுக்குரிய இலக்கம் "331" எனவும் திருத்தப்படுகிறது.

3. அவ் வர்த்தமானிப் பத்திரிகையின் சிங்கள மொழி பெயர்ப்பில் I ஆம் அட்டவணையில்-

| | | |
|---|---|---|
| சியம்பலாபிட்டிய | 185 | ஆக குறிப்பிட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவின் பெயர் |
| சியம்பலாண்டுவ | 185 | ஆகவும் |
| யட்டிநுவர | 344 | ஆக குறிப்பிட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவின் பெயர் |
| யட்டிநுவர | 344 | ஆகவும் |
| வலிகாமம் மேற்கு (சுன்னாகம்) | 637 | ஆக குறிப்பிட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவின் பெயர் |
| வலிகாமம் மேற்கு (சங்கானை) | 637 | ஆகவும் திருத்தப்படுகின்றது. |

4. புதிய திருத்தங்களின் படி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக் கூடியவாறு 2006.09.01 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் இல. 6.0 இல் காட்டப்பட்டுள்ள விண்ணப்பங்கள் எற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2006.10.20 ஆந் திகதிவரை நீடிக்கப்படுகிறது.

பி. ஜீ. கருணாரத்ன,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2006, செத்தெம்பர் 15.

9-924

---

## கல்வி அமைச்சு

### அரசாங்க, அரசாங்க அங்கீகாரம் பெற்ற, தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களை இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதித்தல்-2006/2007 கல்வி ஆண்டு

2006/ 2007 ஆம் கல்வியாண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக பொது ஆங்கிலம்/ கலை (ஆங்கிலப் பாடத்துடன்

கலை) தகைமை (வெளிவாரி) பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைப்பட்டப் பாடநெறி.

(ii) விஞ்ஞானப்பட்டப் பாடநெறி.

2. விண்ணப்பதாரிகள் இதற்காகப் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) 2002 ஆம் வருடத்தில் அல்லது அதன் பின்பு நடாத்தப்பட்ட பொது விஞ்ஞான/கலை (ஆங்கிலப் பாடத்துடன்) தகைமை வெளிவாரி பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். (பரீட்சைப் பெறுபேற்று பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.)

(ii) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று ஆசிரியராக 5 வருட சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

(iii) ஆசிரிய கல்லூரி, கல்விக் கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றிலோ தேசிய கல்வி நிறுவனத்தின் பாடநெறிகளைத் தொடர்வதற்காக பதிவு செய்யாதவராக இருக்க வேண்டும்.

(iv) இவ்விசேட அனுமதியின் கீழ் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) அல்லது பொது விஞ்ஞானத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகள் மற்றும் உரிய பாடங்களுக்கு பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலாகும். இதற்கு மேலதிகமாக உரிய பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கக்கூடிய வகையில் விஞ்ஞானப் பட்டப் பாடநெறியை தொடர்வதற்கான தகைமைபெறும் விண்ணப்பதாரர்கள் அப்பல்கலைக்கழகத்தினால் வாய்மூலப்பரீட்சைக்கு உட்பட வேண்டியதுடன் கலைப்பட்டப் பாடநெறியை தொடர்வதற்கான தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபையின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) இப்பாடநெறியைப் தொடர்வதற்கு தெரிவு செய்யப்படுவார்களாயின் அவர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்பட வேண்டியபடியால் கற்கை விடுமுறை உரிமை கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

3. சம்பளத்துடனான விடுமுறை பெற்றுக் கொள்வதற்குள்ள உரிமைகள் பற்றி நேர்முகப் பரீட்சையின் போது வினவப்படும்.

4. பட்டம் பெற்றுக்கொண்ட பின்பு பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்படமாட்டாது.

5. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் சேவை செய்யும் ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் அப்பாடசாலையின் அதிபர்/முகாமையாளர் என்பவரால் உரிய ஆசிரியருக்காக கற்கை விடுமுறை அனுமதிக்க முடியும்/முடியாது என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

6. சகல விண்ணப்பப்பத்திரங்களும் இங்கு கீழே குறிப்பிடப்படுகின்ற மாதிரிப் படிவத்திற்கேற்பத் தயாரித்து இரண்டு பிரதிகளாக கீழ்க் குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு 2006.10.16 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பப்படிவம் இடப்பட்டு அனுப்பப்படும் தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "2006/2007 இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்பட வேண்டும். அரசாங்க ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளரினாலும் அரசாங்க அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் உரிய அதிபர்/முகாமையாளர் என்பவர்களாலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

மனிதவள அபிவிருத்திக் கிளை,
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

..........................................................தொடர்வதற்கு

*அரசாங்க, அரசாங்க அங்கீகாரம்பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களை இலங்கை பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கோரல்-2006/2007*

1. (i) முழுப்பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. பால் : (ஆண்/பெண்) :----.
3. பதவி (வகுப்பு தரம் மற்றும் சேவை) :----.
4. சொந்த முகவரி :----.
5. அலுவலக முகவரி :----.
6. சேவையில் ஈடுபட்டுள்ள பாடசாலை :-
   வலயம் :----. மாகாணம் மற்றும் மாவட்டம் :----.

   (i) பாடசாலை :----.
   (ii) வலயம் :----.
   (iii) மாகாணம் :----.
   (iv) மாவட்டம் :----.

7. (i) முதல் நியமனத் திகதி :----.
   (ii) நிரந்தர நியமனம் பெற்ற திகதி :----.

8. ஆசிரியராக பதிவு செய்யப்பட்டுள்ள எண் :----.

9. (i) பிறப்பு திகதி :-

   ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

   (ii) 2006.10.16 ஆந் திகதியன்று வயது :-

   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

10. தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைந்த வருடமும்/பாடங்களும் பெறுபேற்றுப் பிரதியொன்றை இணைக்கவும்) :-

(i) வருடம் :----.
(ii) பாடங்கள்-
1:----.
2:----.
3:----.

11. தொடர்வதற்குரிய கல்விப் பாடநெறியின் பெயரும் பாடங்களும் : ----.

(i) பெயர் :----.
(ii) பாடங்கள்-
1:----.
2 :----.
3:----.

12. அனுமதிபெற விரும்பும் பல்கலைக்கழகத்தின் பெயர் :----.

13. தற்போது ஆசிரியர் கல்லூரியொன்றில், கல்விக் கல்லூரி யொன்றில், பல்கலைக்கழகமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் வேறு பாடநெறியொன்றிற்கு பதிவு செய்யப்பட்டுள்ளீரா ? :----.

அவ்வாறாயின் அதன் விபரங்கள் :----.

மேற்படி விவரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதியுரைக்கிறேன்.

.....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட ஆசிரியர் ............................... ஆந் திகதி தொடக்கம்.............................. பாடசாலையில் சேவையாற்றுகின்றாரென்றும் அவர் இப்பாடசாலையிலிருந்து இறுதியாகச் சம்பளம் பெற்றுள்ளாரென்றும் மேற்படி பாடநெறியைத் தொடர அனுமதிக்கப்படலாமென்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். விண்ணப்பதாரிக்குத் தேவைப்படும் சம்பளத்துடனான கற்கை விடுமுறை பெற்றுக்கொள்வதற்காகச் சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

(கற்கை விடுமுறை சிபாரிசு செய்யப்படாவிடின்காரணம் காட்டவும்).

----.
அதிபர்/முகாமையாளரின் கையொப்பமும் உத்தியோக முத்திரையும்.

திகதி :----.
முகவரி :----.

சிபாரிசு செய்கிறேன் /செய்யவில்லை

முகவரி :----.
திகதி :

----.
வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

திகதி :----.
முகவரி :----.

----.
மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும் உத்தியோக முத்திரையும்.

9- 821

---

## இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு II தரம் II இல் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை-2006

மேற்படி பரீட்சை தொடர்பாக 2006 ஓகத்து 11 ஆந் திகதிய 1458 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 06 ஆம் பந்தியின் (மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை) உப பிரிவு (2) (அ) (ii) இல் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன :

(ii) "அரசாங்க சேவையில் அல்லது மாகாண பொதுச் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவராகவும், 2006.09.15 ஆந் திகதியன்று 10 ஆண்டுகளுக்குக் குறையாத திருப்திகரமான சேவையை ஆற்றியவராகவும், ஆண்டொன்றுக்கு 101,880 ரூபாவிற்குக் குறையாத (2004.12.27 ஆந் திகதிய பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருப இல. 09/2004 சம்பளத் திட்டம் ரீ.பி 2-1 அமைவாக) ஆரம்ப வேதன அளவுத் திட்டத்தில் திரட்டிய வேதனத்தைக் கொண்ட பதவியொன்றை வகிப்பவராகவுள்ள ஓர் உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

இதற்கமைவாக, மேற்கூறிய திருத்தத்திற்கேற்ப விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைப்பதற்கான முடிவுத் திகதி 2006 ஐப்பசி 05 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ். பி. திவாரட்ன,
திறைசேரிப் பிரதி செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு 01,
2006, செத்தெம்பர் 20.

9-77

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.